2025 செப்டம்பர் மாதம் 17 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 212/2019

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 – ஆம் தேதி புதன்கிழமை 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW1 நபரின் வாக்கு மூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW1 – ராகவன் |
| தந்தை பெயர்: | கணபதி |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தேனி |
| வயது : | 56 |

தேதி : 17.09.2025.

**முதல் விசாரணை: –**

நான் நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய அனுமதி கடிதம் **எ.ம.சா.ஆ.1**. விபத்தில் ஈடுப்பட்ட TN 60 E 0580 என்ற எண்கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.2**. விபத்தில் ஈடுப்பட்ட TN 58 AB 4224 என்ற எண்கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.3**. விபத்து சமயத்தில் TN 58 AB 4224 என்ற

எண்கொண்ட இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய கருப்பசாமி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதை காட்டுவதற்காக வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய கடிதம் **எ.ம.சா.ஆ.4** ஆக தாக்கல் செய்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற விபரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. விபத்தில் ஈடுப்பட்ட TN 60 E 0580 என்ற எண்கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த ஆண்டவர் என்பவருக்கு சரியான ஓட்டுநர் உரிமம் எங்களுடைய அலுவலகத்தை தவிர வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பதிவு செய்திருந்தால் அந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் 2012ம் வருடத்திற்கு முன்னர் அவர் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அந்த விபரம் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்காது. எங்களுடைய வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மோட்டார் வாகன ஆய்விற்காக விபத்தில் ஈடுப்பட்ட TN 60 E 0580 என்ற எண்கொண்ட வாகனத்தை யார் அலுவலகத்திற்கு கொண்டுவந்தார்கள் என்றும், அவ்வாறு வாகனத்தை ஆய்விற்கு கொண்டுவரும்போது வாகன ஓட்டுநரும் உடன் வரவேண்டுமா என்றும் கேட்டால் வாகன ஆய்விற்காக வாகனத்தை போலீசார் கொண்டுவந்தார்கள், உடன் அழைத்து வரப்படும் நபர் குறித்து போலீசாருக்கு தான் தெரியும், வாகன ஓட்டுநர் ஆய்விற்கு வரவேண்டுமா என்பது குறித்து என்னால் சொல்ல இயலாது. விபத்தில் ஈடுப்பட்ட TN 60 E 0580 என்ற எண்கொண்ட வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் போலீசாரிடம் கொடுக்கப்பட்டு, போலீசாரும் எங்களிடம் ஒப்படைத்ததை நாங்கள் பார்வையிட்டும், ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் விபத்து சமயத்தில் TN 58 AB 4224 என்ற எண்கொண்ட இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய கருப்பசாமி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம்

இல்லை என்பதை காட்டுவதற்காக வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய கடிதம் **எ.ம.சா.ஆ.4** ஆக தாக்கல் செய்துள்ள நிலையில், TN 60 E 0580 என்ற எண்கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த ஆண்டவர் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, ஆனால் எ.ம.சா.ஆ.4ல் ஆண்டவர் என்பவருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் எனக்கு சாட்சிய அழைப்பாணை அனுப்பியுள்ளார் என்றும், அதனால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் நீதிமன்றம் தன்னிச்சையாக 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை முடித்து வைக்கிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 17.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.17 16:14:02 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
17.09.2025